# பண்டைய இலக்கியங்களில் தொண்டைமான் இளந்திரையன்

**முனைவர் சு.அ.அன்னையப்பன்**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN: 2454-3993**

தொண்டைமான் குடியினர் காஞ்சியைத் தலைமையிடமாகக்கொண்டு ஆண்டுவந்த பகுதிக்குத் தொண்டைநாடு எனும் பெயர்பெறும். இந்நாட்டின் வரலாற்றுக் குறிப்புகளை இலக்கியங்கள் பகர்கின்றன. இந்நாட்டைத் தொண்டையர் குடியினர் ஆண்டுவந்தனர் என்றாலும் அவர்களைப்பற்றிய தெளிவான குறிப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சங்கப்பாடல்களில் வருகின்ற பாடல்களின் தொடர்களை வைத்தும் அப்பாடல்கள் கூறும்முறையினை வைத்தும் அக்குடிமரபினர் இந்நாட்டை ஆண்டு வந்தனர் என்பதை உணரமுடிகிறது. இக்குடிமரபினர் பன்னெடுங்காலமாக ஆண்டுவந்தாலும் குறிப்பாகத் தொண்டைமான் இளந்திரையனைப் பற்றிமட்டும் தெளிவாக அறியமுடிகிறது. அவன்தான் இந்நாட்டை ஆண்டான் என்றும் அவனுடைய ஆட்சியில் இரவலர்களுக்குப் பொன்னும் மணியும் வாரி வழங்கினான் என்பதையும் பெரும்பாணாற்றுப்படை விரிவாக விளக்குகிறது. சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் மூன்று நூல்கள் தொண்டைநாட்டைச் சார்ந்த பகுதியினைச் சில குறுநில மன்னர்களும் ஆண்டு வந்தனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. அவை மலைபடுகடாம், சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூற்களாகும்.

காஞ்சிமாநகர் சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலும் பல்வேறு அரசமரபினர்களுக்கு உட்பட்ட பகுதியாகத் திகழ்ந்துள்ளது. அதில் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளும் வழக்காற்றுக் கூறுகளும் காணக்கிடக்கின்றன. இங்கு சங்ககால மக்களின் வாழ்வியல் கூறுகளையும் களப்பிரர் கால மக்களின் வாழ்வியல் கூறுகளையும் பல்லவர்கால மக்களின் வாழ்வியல் கூறுகளையும் விசயநகர நாயாக்கர்கால மக்களின் வாழ்வியல் கூறுகளையும் தற்கால மக்களின் வாழ்வியல் கூறுகளையும் காணமுடியும். காஞ்சிமாநகர் பண்பாட்டுப் பாதிப்புக்களையும் பண்பாட்டுப் படையெடுப்புக்களையும் பண்பாட்டு மாற்றங்களையும் தாங்கிநிற்கிறது.

தொண்டை என்ற சொல்லானது ஆதொண்டை எனும் ஒருவகைக் கொடியின் சொல்லில் இருந்து உருவானவையாகக் கருதப்படுகிறது. தொண்டைமான் என்ற சொல்லானது காத்தாட்டிக் கொடியுடன் வந்த ஓரரசன், தொண்டை மண்டல அரசன், தொண்டைநாட்டை ஆண்ட அரசன், தொண்டை மண்டல அரசன், தொண்டைமான் சக்ரவத்தி, தொண்டைமான்கள் என்னும் அரசன் என்பதை மதுரைத் தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, வரலாற்றுமுறைத் தமிழ்இலக்கியப் பேரகராதி முதலானவை குறிக்கின்றன. இதனை,

**"வண்தேர்த் தொண்டையர் வழைஅமல் அடுக்கத்து" (குறு.260 : 6)**
**என்று குறுந்தொகையிலும்,**
**"மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடிமாலை" (பெ.தி.மொ.2-9-1)**
**"இன்னமும் சொல்லிச் சொல்லாத நன்மைகளும்**
**எல்லாம்உண்டாம் பாடியாயிற்று**
**தொண்டைமான்-சக்கரவர்த்தியேற்றிற்று" (பெ.தி.மொ.2 - 3 - 10)**

எனப் பெருமாள்திருமொழியிலும்,

**"சொல்லரும் புகழான் தொண்டைமான்**
**களிற்றைச் சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு" (வன் : 7 : 69:10)**

என்று சுந்தரரும்,

**"தொண்டைமானுக்கு அன்றுஅருள் கொடுத்தருளும்**
**தொல்லை வண்புகழ் முல்லை நாயகரை" (பெ.பு.3437)**

எனப் பெரியபுராணத்திலும் கூறப்பட்டுள்ளன. தொண்டையர் என்ற சொல் தொண்டைமண்டலக் குடிமரபினரைக் குறிக்கிறது. இதனை,

**"வருவர்கொல் வாழி தோழி பொருவார்**
**மண்எடுத்து உண்ணும் அண்ணல் யானை**
**வண்தேர்த் தொண்டையர் வழைஅமல் அடுக்கத்து" (குறு.260 : 4 - 6)**

என்று குறுந்தொகையிலும்,

**"வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை" (அகம்.85 : 9)**
**"செல்லா நல்இசை பொலம்பூண் திரையன்" (அகம்.340 : 6)**
**"வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்" (அகம்.213 : 1)**

என்று அகநானூற்றிலும் காணமுடிகிறது.

**தொண்டைமான் இளந்திரையனின் பிறப்பு**

இளந்திரையன் என்பது இவருடைய இயற்பெயராகும். தொண்டைநாட்டு மன்னன் ஆதலால் தொண்டைமான் இளந்திரையன் என்று குறிக்கப்பெறுகிறான். இவனைத் தொண்டைமான், இளந்திரையன், திரையன் என்றெல்லாம் கூறுவர். 24 கோட்டங்களையும் 79 உட்கோட்டங்களையும் கொண்ட தமிழகத்தின் வடபகுதி இவனது பெயராலேயே தொண்டைமண்டலம் என்று வழங்குவதாயிற்று. நாகப்பட்டனத்தை ஆண்ட சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகம்சென்று நாகக்கன்னியைச் சேர்ந்த காலத்து அவள் தான் பெற்றமகனை என்ன செய்யவேண்டும் என்று கேட்கிறாள். தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலில் விட்டுவிடச் சொல்கிறான் சோழன். அவ்வாறு விட்ட குழந்தை கடலில் இருந்து கரையேறி வந்து சேர்கிறது. அக்குழந்தைக்கு நாடாட்சி கொடுக்கிறான். அது காஞ்சிபுரப்பகுதியாக அமைகிறது. கடல்திரைவழி வந்ததால் திரையன் என்றும் தொண்டைக் கொடியைச் சுற்றி அனுப்பப்பட்டதால் தொண்டைமான் இளந்திரையன் என்றும் அழைக்கப்பெறுகிறான். அந்நாகக்கன்னிகை பீலிவளை என மணிமேகலை 24-ஆம் காதை 57-ஆம் அடியில் கூறப்பெறுகின்றது. இதனைப் பின்வரும் மணிமேகலை பாடல் அடிகளின்மூலம் அறியலாம்:

**"நாக நாடு நடுக்குஇன்று ஆள்பவன்**
**வாகை வேலோன் வளைவாணன் தேவி**
**வாச மயிலை வயிற்றுள் தோன்றிய**
**பீலிவளை என்போள் பிறந்த அந்நாள்**
**இரவிகுலத்து ஒருவன் இணைமுலை தோயக்**
**கருவொடு வரும் எனக் கணிஎடுத்து உரைத்தனன்**
**ஆங்குஅப் புதல்வன் வருஉம் அல்லது**
**பூங்கொடி வாராள் புலம்பல் இதுகேள்" (மணி.24 : 57 - 61).**

சங்க இலக்கியத்தில் ஒருசில சொற்கள் இடைச்செறுகளாக வருவதைக் காணமுடியும். அதுபோன்றுதான் ஒருசில புராணக்கதைகள் இடைச்செறுகளாக இங்கு வந்துள்ளது. தமிழகத்தில் சங்கம்மருவியகாலத்திலிருந்து பல்வேறு அரசுப்படையெடுப்புக்களால் பல்வேறுஅரசியல், சாதி,

சமயம், பொருளாதாரம், பண்பாடு, வழக்காற்றுச் சொற்கள் என்று மாற்றம் அடைந்துள்ளது என்பது வரலாற்று உண்மையாகும். தமிழகவரலாற்றிலும் தொண்டை மண்டல வரலாற்றிலும் மிகப்பெரிய மாற்றங்கள் அடைந்துள்ளன என்பதை இங்கு உணரவேண்டும். தொண்டைநாடு ஒரு காலக்கட்டத்தில் பாண்டியர்களுக்கு உட்பட்டும் மற்றொரு காலக்கட்டத்தில் சோழர்களுக்கு உட்பட்ட சிற்றரசாகவும் சில காலக்கட்டங்களில் தனித்த பேரரசாகவும் விளங்கியுள்ளது என்பது இலக்கியங்கள் காட்டும் சான்றுகளாகும். இவன் கச்சிமாநாகரிலிருந்து அரசாண்டவன் ஆவான் (பெரும்பாண்.420) வேங்கடமலையும் பவத்திரி என்னும் கடற்கரை நகரும் தென்பெண்ணெயாறும் (அகம்.85, 340) இவனுக்குரியதாகும்.

**தொண்டைமான் இளந்திரையனின் சிறப்புகள்**

தொண்டையர் குடிமரபில் தொண்டைமான் இளந்திரையன் மிக்க சிறப்புடையவன். இவனுடைய முன்னோர் திரைகடல் வழியாகப்போய்த் தொண்டைநாட்டிற்கு வேந்தனாயினர் எனக் கருதப்படுகிறது. தொண்டைமான் இளந்திரையன் பரிசிலருக்கு வாரிவாரிக் கொடுக்கும் தன்மை உடையவன். பெரியநிலத்தை வாமன அவதாரத்தில் தன் இரண்டடியால் கடந்த திரு உரைகின்ற மார்பினையுடைய கடல் வண்ணனாகிய திருமால் மரபில் வந்தவன் அக்கடல் திரையால் கரைசேர்க்கப் பெற்ற வலிமையுடைய குடியில் பிறந்தவன். இந்நிலவுலகத்து நிலைபெறுகின்ற உயிர்களைக் காக்கும் நால்வகை முரசுடைய சேர, சோழ, பாண்டியருள் ஒளிவிடுகின்ற கடல் நீரில் தோன்றும் சங்குகளில் சிறந்ததாகிய வலம்புரிச் சங்கு போன்றவன். தீமையை நீக்கி அறம் செலுத்துகின்ற செங்கோலையுடையவன்.பலவகையான வேல்படையையுடைய இளந்திரையனை நோக்கிச் செல்வீராயின் உன்வறுமையால் ஏற்பட்ட துன்பம் ஒழியும் எனக் கூறுவதைப் பின்வரும் பாடல் அடிகளால் அறியலாம்:

**“இருநிலம் கடந்த திருமறு மார்பின்**
**முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்**
**திரைதரு மரபின் உரவோள் உம்பல்,**
**மலர்தலை உலகத்து மன்உயிர் காக்கும்**
**முரசுமுழுங்கு தானை மூவ ருள்ளும்,**
**இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்**
**வலம்புரி அன்ன, வசைநீங்கு சிறப்பின்,**
**அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்,**
**பல்வேல் திரையற் படர்குவிர் ஆயின்**
**கேள் அவன் நிலையே; கெடுகநின் அவலம்” (பெரும்பாண்.29 - 38).**

தொண்டைமான் இளந்திரையன் மூவேந்தர் பெற்ற வெற்றிகளைப்போல் பற்பல வெற்றிகளைப் பெற்றுள்ளான். இவன் மூவேந்தர்களுக்கு நிகராகப் போர்ப்படைகளை வைத்திருந்தவன். இவனிடத்தில் போர்ப் படைகளும் போர்ப்படைக்கருவிகளும் எண்ணிலடங்கா அளவில் இருந்துள்ளன. பகையரசர்கள் தொண்டைநாடு என்றும் தொண்டைமான் இளந்திரையன் என்றும் கச்சிநாடு எனவும் கேள்விப்படுகின்றபோது அவர்கள் நடுக்கம் கொண்டுள்ளனர். மூவேந்தர்களும் அஞ்சியுள்ளனர். இவன் தனித்த ஒரு நாட்டையும் தனித்த ஓர் அரசையும் தனித்த ஒரு கொள்கையும் வகுத்துக் கொண்டு பேரும்புகழும் அடைந்திருக்கிறான். இவன் தொண்டை நாட்டிற்கும் தொண்டை மண்டலத்திற்கும் தொண்டைமண்டல அரச மரபினருக்கும் தனித்த ஒரு முத்திரையைப் பதித்திருக்கிறான். தொண்டைமான் இளந்திரையன் மூவேந்தர்களுக்கு முன்னோடியாகவும் மூவேந்தர்களுக்கு இணையானவனாகவும் காணப்பட்டிருக்கிறான். மூவேந்தர் மரபுரிமை வரிசையில் இவன் நான்காவதாகப் பேசப்பட்டுள்ளான். இவனுடைய காலத்தில் தொண்டை நாட்டிற்குத் தனித்த ஓர் அடையாளத்தை ஏற்படுத்தியிருக்கிறான் என்பது புலனாகின்றது.

**இளந்திரையனின் போர் வெற்றி**

தொண்டைமான் இளந்திரையன் தன் நாட்டு மக்களைக் காப்பாற்ற, பலவகையான போர்களைச் செய்து வெற்றிபெற்றுள்ளான். அவன் பலவகையான போர்க்கருவிகளையும் பலவகையான

போர்ப்படைகளையும் வைத்திருந்துள்ளான். அவன் போர் செய்யும் போர்க்களம் பாரதப்போர்க்களம் போன்று இருந்தது. துரியோதனனாதியர் நூற்றுவர் பாண்டவர் ஐவரோடு போர் செய்த களம்போன்று இருந்தது. அப்போர்க்களத்தில் இரத்தஆறு ஓடிற்று. அது சிவந்தவானம் போன்று இருந்தது. அவ்வானத்தில் மேகங்கள் அசைந்து கொண்டிருந்தன. மேகங்கள் போன்று யானைப் பிணங்கள் இரத்த ஆற்றில் அசைந்து கொண்டிருந்தன. யானையின் கொம்புகள் சிவந்த வானத்தில் தோன்றும் பிறைபோன்று இருந்தன. இவ்வாறு அமைந்திருக்கும் தொண்டைமான் இளந்திரையன் போர்க்களம். அவன் பகைவர்களை வென்று அவகளுடைய கொடுஞ்சி என்னும் உறுப்புடைய பெரியதேரைக் கவர்ந்து வருகிறான். அவனிடம் மிகப்பெரிய சேனை இருந்தது. அவனை எதிர்த்து வந்தோரை அழித்து ஆரவாரம் செய்வான். அத்தகையவன் கச்சியில் இருந்தான். மேலும் பிறருக்குக் கொடுப்பதில் மிகுந்த வள்ளல் தன்மையுடையவன். இங்கு, தொன்மையான வடநாட்டவராகிய துரியோதனனாதியர் நூற்றுவர், பாண்டவர் வரலாற்றுத் தொன்மம் காணப்பட்டுள்ளது. தொண்டை மண்டலத்தில் உள்ள பல ஊர்களில் பாண்டவர்களுள் ஒருவராகிய அருச்சுனன் வரலாறும் காணக்கிடக்கின்றது. குறிப்பாக, பாண்டவர்களுள் ஒருவராகிய அருச்சுனன் வரலாறு விழுப்புர மாவட்டத்தில் உள்ள கூத்தாண்டவர் கோயிலோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. வடநாட்டு வரலாற்றுத் தொடர்பையும் தொண்டைமண்டல வரலாற்றுத் தொடர்பையும் பெரும்பாணாற்றுப்படை எனும் நூலில் குறபனமூரர

**“அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வாய்**
**அந்தி வானத்து ஆடுமழை கடுப்ப,**
**வெண்கோட்டு இரும்பிணம் குருதி ஈர்ப்ப,**
**ஈர் ஐம்பதின்மரும், பொருது, களத்து அவிய,**
**போர்அமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்**
**ஆராச் செருவின் ஐவர் போல,**
**அடங்காத் தானையோடு உடன்று மேல்வந்த**
**ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து,**
**கச்சியோனே, கைவண் தோன்றல்,” (பெரும்பாண்.412 - 420).**

தொண்டைமான் இளந்திரையன் அவனை விரும்பிச் சென்றோருக்குப் பாதுகாவலாக இருப்பான்; தன்னை எதிர்த்தோரை அழிக்கும் ஆற்றல் உடையவன். பல மன்னர்கள் பலவகைப் பொருட்களையும் சுமந்துகொண்டு இவன் அரண்மனைக்கு வருவர். அவர் குறைவற்ற செல்வத்தோடு நெருங்க முடியாதநிலையில் அவன் முற்றத்தில் அவனைப்பார்க்கும் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர். இங்கு அவனுடைய வெற்றியின் சிறப்பைப் பற்றிக் கூறினாலும் தொண்டைமண்டலப் பகுதியில் மிகச் சிறந்த அரசாட்சி உரிமை பெற்று ஆளப்பட்டு வந்துள்ளது என்பதைப் பின்வரும் பாடல் வரிகள் குறிக்கின்றன:

**“நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகிய**
**அளியும் தெறலும் எளிய ஆகலின்,**
**மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட,**
**நயந்தோர் தேஎம் நன்பொன் பூப்ப,**
**நட்புக்கொளல் வேண்டிய நயந்திசி னோரும்,**
**துப்புக்கொளல் வேண்டி துணையி லோரும்,**
**கல்வீழ் அருவி கடற்படர்ந் தாங்கு,**
**பல்வேறு வகையின் பணிந்த மன்னர்**
**இமையவர் உறையும் சிமையச் செவ்வரை,**
**வெண்திரை கிழித்த, விளங்குசுடர் நெடுங்கோட்டுப்**
**பொன்கொழித்து இழிதரும், போக்கு அருங் கங்கைப்**
**பெருநீர் போகும் இரியல் மாக்கள்**
**ஒருமரப் பாணியில் தூங்கி யாங்கு**
**தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇ,**
**செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்து,” (பெரும்பாண்.421 - 435).**

**தொண்டைமான் இளந்திரையனது மலையின் பெருமை**

தொண்டைமான் இளந்திரையனுக்கு வடக்கு எல்லை திருவேங்கடமலைப் பகுதியாகும். இம்மலையில் இறைவன் திருமால் உறைகின்றார். திருமால் மக்களுக்கு இறையருளை வழங்கி அவர்களை நல்வழிப் பாதைக்கு அழைத்துச் செல்கின்றார். இனிய தாளத்திற்கு ஏற்ப இசைபாடுகின்ற கின்னரப்பறவைகள் வசிக்கின்ற சோலையையுடையது அம்மலை. அம்மலையானது தெய்வங்கள் உறையும் சோலையையுடையது. மயில்கள் ஆடும் இளமரங்கள் நெருங்கி வளர்ந்துள்ள காடுகளையுடையது; குரங்குகள் ஒரு கொப்பிலிருந்து மற்றொரு கொப்பிற்குத் தாவுவதால் மலர்கள் உதிர்கின்ற சோலைகளையுடையது; மந்திகள் முனிவர்கள் தவம்செய்யும் இடங்களில் உள்ள குப்பைகளை நீக்கித் தூய்மைப்படுத்தும். பகையுணர்வுடைய மானும் புலியும் அன்புடன் அம்மலையில் வாழும். நெருப்புமூட்டி வேள்விசெய்யும் முனிவர்கள் பலர் வாழும் அம்மலையில் வெண்மையான கொம்பினையுடைய யானைகள் அம்முனிவர்களுக்கு வேள்வி செய்வதற்குரிய விறகுகளைக்கொண்டு வந்து தருகின்றன. ஒளியுடைய அருவிகள் பல உள்ள மலையாக அது திகழ்கிறது. அதுதான் திருவேங்கடமலை என்பதைப் பின்வரும் பாடல் அடிகள் விளக்குகின்றன:

**“கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்,**
**மஞ்ஞை ஆலும் மரம்பயில் இறும்பின்,**
**கலைபாய்ந்து உதிர்த்த மலர்வீழ் புறவின்,**
**மந்தி சீக்கும் மாதுஞ்சும் முன்றில்,**
**செந்தீப் பேணிய முனிவர், வெண்கோட்டுக்**
**களிறுதரு விறகின் வேட்கும்,**
**ஒளிறுஇலங்கு அருவிய மலைகிழ வோனே” (பெரும்பாண்.494 - 500).**